# CARAT 2023 நிறைவு நிகழ்வு

## 2023 ஜனவரி 26ஆம் திகதி வியாழக்கிழமை

## CARAT பயிற்சியின் நிறைவு நிகழ்வில் அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்

உங்களனைவருக்கும் இனிய மாலை வணக்கம். CARAT 2023 இன் வெற்றியைக் கொண்டாடுவதற்காக இன்று உங்களனைவருடனும் இணைந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். CARAT 2023 இன் வெற்றியைக் கொண்டாடுதல் என நான் கூறுகிறேன். “அம்மா, இது மிகவும் அருமையாக இருக்கிறது” என்பது நேற்று கப்பலில் ஏறும் வாய்ப்பைப் பெற்ற எனது 10 வயது மகனின் வார்த்தைகளாக இருந்தது. இலங்கை கடற்படை கட்டளைத் தளபதி, வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, USN 7ஆவது கப்பற்படை துணைக் கட்டளைத் தளபதி, ரியர் அட்மிரல் ஜோக்கீன் மார்டினெஸ் டி பினிலொஸ், USS Anchorage கட்டளை அதிகாரி கடற்படை கெப்டன் டேனியல் கீலர் உள்ளிட்ட இங்கு வருகை தந்திருக்கும் உங்களனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கை கடற்படை மற்றும் விமானப்படை, USS Anchorage அதிகாரிகள் மற்றும் குழுவினர், Destroyer Squadron 7, அமெரிக்க மரைன் படையணியின் 13$^{th}$ Marine Expeditionary Unit, மற்றும் CARAT பயிற்சியினை வெற்றியடையச் செய்வதற்குப் பங்காற்றிய அனைவரையும் நான் பாராட்டுகிறேன்.

CARAT என்பது அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான மிகப்பெரிய இருதரப்பு இராணுவ கூட்டுப்பயிற்சியாகும். அது இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு மிகமுக்கியமான ஒன்றாகும் என அமெரிக்காவில் உள்ள நாங்கள் கருதுகிறோம். நான் தற்போதுதான் ஹொனலூலுவில் உள்ள INDOPACOM இற்கு விஜயம் செய்து திரும்பினேன். ஒரு சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ பசிபிக் பிராந்தியத்தை நிலைநாட்டுவது - எங்களுக்கும் இலங்கை உள்ளிட்ட பிராந்தியத்தில் உள்ள எங்களது நண்பர்களுக்கும் - பொருளாதார மீள்தன்மை, நல்லாட்சி மற்றும் பரந்த அடிப்படையிலான செழிப்பு ஆகியவற்றிற்கும் ஏன் மிகவும் முக்கியமானது என்பதைப் பற்றி அங்கு நாங்கள் பேசினோம்.

கொவிட்-19 பெருந்தொற்றானது இந்த பயிற்சியை ஓரிரு ஆண்டுகளுக்கு இடைநிறுத்தியது, எனினும் எமது அட்மிரல் குறிப்பிட்டது போன்று, அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமிடையிலான நட்பு, பங்காண்மை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றிற்கான அற்புதமான 75 ஆண்டுகால உறவைக்குறிக்கும் ஆண்டாக அமையும் 2023 ஆம் ஆண்டில் எமது இராணுவங்கள் இப்பயிற்சியை மீண்டும் மேற்கொள்ள முடிந்ததையிட்டு நான் குதூகலமடைகிறேன்.

இவ்வருடம் அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவுகளின் முக்கால் நூற்றாண்டு நிறைவினை நாம் அனுசரிக்கின்றோம். அது எமது பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட பரந்த மற்றும் ஆழமான உறவாகும்.

அந்த உறவின் நீண்ட ஆயுளையும் மற்றும் இப்பிராந்தியத்தை பாதுகாப்பான, தன்னுறுதிவாய்ந்த, மற்றும் செழிப்பானதாக மாற்றுவதில் ஒருவருக்கொருவர் நாம் கொண்டுள்ள தொடர்ச்சியான எமது அர்ப்பணிப்பையும் கொண்டாடுவதற்கு இவ்வருடம் எமக்குக் கிடைக்கும் பல வாய்ப்புகளில் CARAT முதன்மையானதாகும்.

இது, பயங்கரவாதம், ஆட்கடத்தல் மற்றும் இந்து சமுத்திரத்தில் விதிகளின் அடிப்படையிலான ஒழுங்கைப் பேணுவாற்கு அச்சுறுத்தலாக அமையும் ஏனைய நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்த்துப் போராட உதவும் இராணுவத்தின் அடிப்படையான திறன்களை அபிவிருத்தி செய்யும் ஒரு பயிற்சியாகும்.

இலங்கை கடற்படைக் கப்பல்களான கஜபாகு மற்றும் விஜயபாகு என்பன இப்பயிற்சியில் பங்கேற்பதைக் கண்டு நான் மிகவும் பூரிப்படைந்தேன். கடந்த நவம்பர் மாதத்தில்தான் ஒரு அழகான விழாவில் விஜயபாகு கடற்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டது. இரண்டு கப்பல்களுமே அமெரிக்கா வழங்கிய நன்கொடைகளாகும். மற்றும் அவை இலங்கையின் கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் இறைமை தொடர்பில் நாம் கொண்டுள்ள உறுதிப்பாட்டிற்கான ஒரு சான்றாகவும் விளங்குகின்றன.

எனினும், எமக்கிடையிலான உறவுகளை ஆழப்படுத்துவதற்கு வேறு பல வழிகளில் CARAT பயிற்சி எவ்வாறு பங்காற்றியது என்பதைப் பார்த்து, இந்தப் பயிற்சியை உன்னிப்பாகக் கவனிக்கும் வாய்ப்பைப் பெற்ற நாங்கள் நம்பமுடியாத அளவிற்கு ஆச்சரியமடைந்தோம்.

உதாரணமாக, ஒரு இயற்கை அனர்த்தம் ஏற்பட்டால் இலங்கையர்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதை உறுதி செய்வதற்காக நீர் சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் எமது இராணுவத்தினர் பயிற்சி பெற்றனர்.

இராணுவத் துறையில் பெண்கள் அதிகரித்த தாக்கத்தை ஏற்படுத்தும் பல வழிகள் குறித்து இரு நாடுகளதும் இராணுவத்தில் பணிபுரியும் உறுப்பினர்கள் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்கிய ஒரு முக்கியமான மகளிர் சமாதான மற்றும் பாதுகாப்பு நிகழ்வை நாங்கள் நடத்தினோம். இன்று இங்குள்ள பெண்கள் அனைவரையும் நான் மிகவும் மெச்சுகிறேன். உண்மையில் முதன்முறையாக இலங்கையைச் சேர்ந்த பெண் அதிகாரிகள் ஒரு வெளிநாட்டு கடற்படைக் கப்பலில் முழுமையாக கப்பலேறிய நிகழ்வு CARAT 2023 பயிற்சியின் போதுதான் இடம்பெற்றது. பிரமாதம்.

எமது இரு நாடுகளதும் கலாச்சாரப் பாரம்பரியங்கள் மற்றும் தனித்துவமான பாடல்களுக்கு மதிப்பளித்து எமது இசைக்குழுக்கள் ஒன்றாக இணைந்து வாத்தியக்கருவிகளை இசைத்ததை நான் பெரிதும் விரும்பினேன். விக்டோரியா பூங்காவில் நடந்த கூட்டு இசைக் கச்சேரியினை எமது குடும்பத்தினருடன் இணைந்து ரசித்தமை எனது வாரத்தின் ஒரு சிறப்பம்சமாக அமைந்ததுடன் சிறப்பாக வந்திரதம் வாசிக்கும் எனது திறமையினை மேடையில் வெளிப்படுத்தவும் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது!

இப்பயிற்சியில் பங்கேற்ற எங்களுடைய சிறந்த இராணுவப் பங்காளர்களான ஜப்பானிய தற்காப்புப் படை மற்றும் மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படை ஆகியவற்றுடன் சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் எம்மால் முடிந்தது.

இராணுவங்களிடையே இணைப்புக் கட்டமைப்புகளை உருவாக்கி, உண்மையான பங்காண்மை கட்டமைக்கப்படும் அடித்தளமாக விளங்குவது CARAT போன்ற ஈடுபாடுகளேயாகும். குறிப்பாக கடினமான காலங்களில் இது மிகவும் உண்மையான விடயமாகும்.

விஜயபாஹு கப்பலை வழங்கியமை மற்றும் பாடசாலையில் பிள்ளைகளுக்கு உணவு வழங்கப்படுவதையும், வெற்றிகரமான பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்குத் தேவையான உரங்கள் விவசாயிகளுக்கு கிடைப்பதையும் உறுதி செய்யும் 240 மில்லியன் டொலர் பெறுமதியான மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவி ஆகியவை அடங்கலாக ஒரு சவாலான 2022ஆம் ஆண்டில் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய ஆதரவின் ஆழ அகலம் குறித்து நான் மிகவும் பெருமையடைகிறேன்.

உறுதியாக வளர்ந்துள்ள எமது நாடுகளுக்கு இடையிலான உறவை முக்கால் நூற்றாண்டு காலமாக நாம் போஷித்து வளர்த்துள்ளோம்.

CARAT போன்ற நிகழ்வுகள் ஊடாக அந்த வளர்ச்சி தொடர்கையில், வெளிநாட்டில் இருந்து வரும் தீங்கு விளைவிக்கும் செல்வாக்கை எதிர்க்கும், தனது இறையாண்மையினைப் பாதுகாக்கும் மற்றும் அனைத்து இலங்கை மக்களுக்கும் செழிப்பை ஏற்படுத்தக்கூடிய வலிமையான நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் திறன் கொண்ட ஒரு வலிமையான மற்றும் மீள்தன்மையுடைய இலங்கை தோற்றம் பெறுவதை நாம் காண்போம்.

இலங்கை அரசாங்கம், இலங்கை இராணுவம் மற்றும் அமெரிக்க இராணுவத்தில் உள்ள எனது சகாக்கள் மற்றும் நண்பர்களுக்கும், மற்றும் நீண்டகாலமாக நீடித்திருக்கும் எமது உறவில் இன்னுமொரு முக்கியமான பகுதியாக இப்பயிற்சியை மாற்றிய அனைவருக்கும், உங்களனைவரதும் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பிற்கு மீண்டும் ஒருமுறை நான் நன்றி கூறுகிறேன். எமது பங்காண்மை, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தின் அடுத்த 75 ஆண்டுகளை வரவேற்போம். நன்றி!